# அக்டோபர் – 23 – செவ்வாய்

### கப்பெஸ்தானோ நகர புனித யோவான்

### நீதி அவர்முன் செல்லும்: அவர்தம் அடிச்சுவடுகளுக்கு வழி வகுக்கும். திபா. 85:13

## முதல் வாசகம் : ஏபேசியர் 2 : 12 - 22

சகோதர சகோதரிகளே! அக்காலத்தில் நீங்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாதவர்களாகவும், இஸ்ரயேலரின் சமுதாயத்துக்குப் புறம்பானவர்களாகவும், வாக்குறுதியைக் கொண்டிருந்த உடன்படிக்கைக்கு அன்னியர்களாகவும், எதிர்நோக்கு இல்லாதவர் களாகவும் இவ்வுலகில் இருந்தீர்கள். ஒருகாலத்தில் தொலைவில் இருந்த நீங்கள் இப்பொழுது இயேசு கிறிஸ்துவோடு இணைந்து, அவரது இரத்தத்தின் மூலம் அருகில் கொண்டு வரப்பட்டிருக்கிறீர்கள்.ஏனெனில் அவரே நமக்கு அமைதி அருள்பவர். அவரே இரண்டு இனத்தவரையும் பிரித்து நின்ற பகைமை என்னும் சுவரை, தமது உடலில் ஏற்ற துன்பத்தின் வழியாய்த் தகர்த்தெறிந்து, அவர்களை ஒன்றுபடுத்தினார்.பல கட்டளைகளையும் விதிகளையும் கொண்ட யூதச் சட்டத்தை அழித்தார். இரு இனத்தவரையும் தம்மோடு இணைந்திருக்கும் புதியதொரு மனித இனமாகப் படைத்து அமைதி ஏற்படுத்தவே இவ்வாறு செய்தார்.தாமே துன்புற்றுப் பகைமையை அழித்தார். சிலுவையின் வழியாக இரு இனத்தவரையும் ஒருடலாக்கிக் கடவுளோடு ஒப்புரவாக்க இப்படிச்செய்தார்.அவர் வந்து, தொலைவில் இருந்த உங்களுக்கும், அங்கிலிருந்த அவர்களுக்கும் அமைதியை நற்செய்தியாக அறிவித்தார்.அவர் வழியாகவே, இரு இனத்தவராகிய நாம் ஒரே தூய ஆவி மூலம் நம் தந்தையை அணுகும் பேறு பெற்றிருக்கிறோம். எனவே இனி நீங்கள் அன்னியர் அல்ல. வேற்று நாட்டினரும் அல்ல. இறைமக்கள் சமுதாயத்தின் உடன் குடிமக்கள் கடவுளின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.திருத்தூதர்கள், இறைவாக்கினர்கள் ஆகியோர்களை அடித்தளமாகவும், கிறிஸ்து இயேசுவையே மூலைக்கல்லாகவும் கொண்டு அமைக்கப்பட்ட கட்டடமாய் இருக்கிறீர்கள்.கிறிஸ்துவின் உறவில் கட்டடம் முழுவதும் இசைவாகப் பொருந்தி, ஆண்டவருக்கென்று தூய கோவிலாக வளர்ச்சி பெறுகிறது.நீங்களும் அவரோடு இணைந்து தூய ஆவி வழியாகக் கடவுளின் உறைவிடமாகக் கட்டப்பட்டு வருகிறீர்கள்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தம் மக்களுக்கு நிலைவாழ்வை வாக்களிக்கிறார்.

## நற்செய்தி : லூக்கா 12 : 35 - 38

அக்காலத்தில் இயேசு தமது சீடர்களை நோக்கிக் கூறியதாவது : ”உங்கள் இடையை வரிந்துகட்டிக் கொள்ளுங்கள். விளக்குகளும் எரிந்து கொண்டிருக்கட்டும். திருமண விருந்துக்குப் போயிருந்த தம் தலைவர் திரும்பிவந்து தட்டும்போது உடனே அவருக்குக் கதவைத் திறக்கக்காத்திருக்கும் பணியாளருக்கு ஒப்பாய் இருங்கள். தலைவர் வந்துபார்க்கும்போது விழித்திருக்கும் பணியாளர்கள் பேறுபெற்றவர்கள். அவர் தம் இடையை வரிந்து கட்டிக்கொண்டு அவர்களைப் பந்தியில் அமரச்செய்து, அவர்களிடம் வந்து பணிவிடை செய்வார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். தலைவர் இரவின் இரண்டாம் காவல் வேளையில் வந்தாலும் மூன்றாம் காவல் வேளையில் வந்தாலும் அவர்கள் விழிப்பாயிருப்பதைக் காண்பாரானால் அவர்கள் பேறுபெற்றவர்கள்” என்றார்.

**தியானம்:** இயேசுவின் இரண்டாம் வருகைப் பிண்ணணியில் எழுதப்பட்ட இன்றைய வாசகம் வாழ்வைப்பற்றிய ஒரு முக்கிய பாடத்தை எமக்கு கற்றுத்தருகின்றது. அதாவது வாழ்வைச் சரியான முறையில் அணுகுவதே இதற்கான மனநிலை எது என்ற சிந்தனையை நமக்கு சுட்டிக்காட்டுகிறது. இன்றைய நற்செய்தி விழிப்பாயிருத்தலே வாழ்வை அணுகுவதற்கான சரியான மனநிலை “விழிப்பாயிருத்தல்” ‘என்றால்‘ தயார் நிலையில் இருத்தல்’ என்று பொருள் “உங்கள் இடையை வரிந்து கட்டிக்கொள்ளுங்கள் என்ற வரி இதையே சுட்டிக்காட்டுகிறது. தயார் நிலையில் இருப்பவர்கள் கொடுக்கப்பட்ட கடமைகளைச்சரிவரச் செய்து நாளை பார்த்துக்கொள்ளலாம் என்று எதையும் தள்ளிப்போடாதவர்கள். கடந்த கால கசப்புணர்வுகளையும் எதிர்கால கனவுகளையும் அசை போடாமல் நிகழ்காலத்தின் ஒவ்வொரு வினாடியையும் சிறப்பாக பயன்படுத்துகின்றவர்கள். 1)வாழ்வின் மேன்மை பந்தியில் அமர்வதில் அல்ல, மாறாக, பணிவிடை புரிவதிலேயே அடங்கியிருக்கிறது என்ற உண்மையை புரிந்து வைத்திருப்பவர்கள். 2) எப்படிப்பட்ட மனிதர்கள் வழியாகவும் எந்த நேரத்திலும் இறைவன் வந்தாலும் அவர்களை வரவேற்று தம்மால் இயன்ற உதவிகளைச்செய்பவர்கள். 3) சில வேளைகளில் பிறரின் சிந்தனை மற்றும் அறிவுரைப் பூர்வமாக்க் கூட வரும் தலைவனாகிய இறைவனுக்கு உள்ளமாகிய கதவைத்திறந்து வைக்கின்றவர்கள் 4) மரணம் எப்பொழுது வந்தாலும் இறக்கத்தயார் என்று மனமுவந்து சொல்பவர்கள். எனவே இன்று ஒருவேளை நான் இறக்க வேண்டியிருந்தால் மரணத்தை மனநிறைவோடு ஏற்றுக்கொள்ளும் தயார் பெற்ற மன நிலை என்னிடம் உண்டா என்பதை சிந்தித்துப்பார்ப்போம்.